1981 பிப்ரவரி 9]

திரு மி. வின்சென்ட் : இயற்கை வைரம் வெட்டி எடுப்பார்களா என்று கேட்கிறேன். கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, செயற்கை வைரம் உற்பத்தி செய்வதைப் பற்றி. இயற்கை வைரம் பற்றி கேட்காதீர்கள். மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே இந்தச் செயற்கை வைரங்கள் தயாரிக்கக்கூடிய தொழில் திருச்சி மாவட்டத்திலே மிக அதிகமாக நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அதிலே ஈடுபட்டு, அந்தத் தொழிலைச் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்து, தனியார் வியாபாரிகளிடத்திலே விற்கக் கூடிய நேரத்திலே, சரியானவிலை கிடைப்பதில்லை. அவர்களுக்கு சரியான ஊதியமும் கிடைக்காத காரணத்தாலே, அரசாங்கமே ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டும். அல்லது கூட்டுறவு முறையிலே ஒரு தொழிற்சாலை துவங்க, எந்த அளவு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவு உதவி செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தற்பொழுது அது போன்ற திட்டம் ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

ஜவ்வாது மலைப் பகுதியில் பேப்பர் தொழிற்சாலை.

*வினா எண். 258—திரு. இல பலராமன் : மாண்புமிகு தொழில்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாதுமலை (வட ஆற்காடு) பகுதியில் கிடைக்கும் மூங்கிலை மூலப் பொருளாகக் கொண்டு அங்கு ஒரு காகித தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் ஏராளமான மூங்கில்கள் கிடைக்கின்றன. அங்குள்ள மலைவாழ் மக்களும் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். இதை மனதில் கொண்டாவது, இனிமேலாவது அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா, நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 9

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் ஆண்டொன்றுக்கு ஆயிரம் டன் மூங்கில்கள்தான் அங்கே கிடைப்பதாகத் தகவல். எனவே, அதைக் கொண்டு ஒரு காகிதத் தொழிற்சாலையை அங்கே நிறுவி, முழுமையாக நடத்த முடியாது. இரண்டாவது, அந்த பகுதியிலே, மூங்கில்கள் இருப்பு அதிகமாகக் குறைந்து வருகிற காரணத்தாலே, இருக்கிற மூங்கில்களையும் வெட்டக் கூடாது என்கிற அளவிலே வெட்டப்படாமல் இருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில் ஒரு காகிதத் தொழிற்சாலையை, அங்கே கிடைக்கிற மூங்கில்களை மட்டும் வைத்துக் துவங்குவதற்கு, அதற்கான திட்டங்கள் அரசிடம் இல்லை.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் தொழிற்சாலையில் மிகவும் பின் தங்கிய மாவட்டம். ஜவ்வாது மலையிலிருந்து கிடைக்கும் மூங்கிலிலிருந்தும், அந்த மாவட்டத்திலிருக்கிற மூன்று சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கிற கரும்பு சக்கையிலிருந்தும், ஒரு காகிதத்தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று பெரிய தொழிற்சாலைகள் காகிதத் தொழிற்சாலைகள் நடைபெற்று வருகின்றன. இது போக ஆறு தொழிற்சாலைகள் உரிமம் பெற்று வேலைகள் துவங்கி இருக்கின்றன. இதைத் தவிர '' டிட்கோவிலே '' கங்கா கிருஷ்ணமூர்த்தி பேப்பர் போர்டு அண்டு லிமிடெட் என்கிறவர்கள் சென்னையில் ஆறாயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்ட காகிதத் தொழிற்சாலையை நிறுவ அனுமதி கோரி மனு வந்திருக்கிறது.

இதைத் தவிர நியூஸ் பிரிண்ட்லேயிருந்து ஏறக்குறைய 150 கோடியிலே நிறுவப்படுகிற திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இப்படி பல்வேறுத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல வேறு திட்டம் எதுவும் இப்போது அரசினிடத்திலே தனியாக இல்லை.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பின்தங்கிய தாலுக்காக்கள்

* வினா எண் 259 —திரு. எஸ். டி. உகம் சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம், செங்கற்பட்டு, உத்திரமேரூர் தாலுக்காக்களை தொழிற்துறையில் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?